**M/s.ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டின்**
**ரெசொலூஷன் பிளானிற்கான**
**விருப்பம் கோரி அறிவிப்பு**
**(CIN: U45400TN2012PTC084362)**

M/s.ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட், கட்டுமான தொழிலை முதன்மை தொழிலாக கொண்டுள்ளது. இதன் பதிவு அலுவலகம் Suite A, எண் – 43, பழைய எண்: 62/2, யுனைடெட் பிளாசா, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை, – 600 017 தமிழ்நாடு, மற்றும் அதன் கட்டுமான பிரிவு “எமரால்டு“, கிராமம் எண்.221, பரனூர் & எண்.71, ஆர்டிஓ ஆபீஸ், மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி (எதிரில்) ஜிஎஸ்டி ரோடு, செட்டிபுண்ணியம் – 603002, தமிழ்நாடு ஆகிய இடங்களில் அமைந்துள்ளது.

M/s.ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு எதிரான திவால் தீர்மான நடைமுறைகளை 26.09.2017 முதல் துவங்குவதற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் ஆணையட்டுள்ளது. எனவே, இந்த அறிவிப்பில் விருப்பமுள்ள நபர்கள் (ரெசொலூஷன் அப்ளிகென்ட்) தங்களது விருப்பதிற்கான படிவங்களை இன்சால்வன்சி மற்றும் பேங்க்ரப்சி கோடு, 2016, பிரிவு 25(2) (h)–ன் படி, விதிகளுக்கு ஏற்ப அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மட்டுமே இந்த திட்டத்திற்கு சமப்பிற்கும் நபராக பட்டியலிடப்படுவார் :

1. குறைந்தபட்சம் 100 கோடி ரூபாய் திரட்ட நிதி முதலீட்டிற்கும் நிதித் திறனுக்கும் உறுதியான ஆதாரம் இருக்க வேண்டும. இருப்பினும், முதலீட்டு நிறுவனங்கள் / நிதி மேலாண்மைக்கு கீழ் குறைந்தபட்ச சொத்துக்கள் (அல்லது உறுதி செய்யப்பட்ட நிதி) 100 கோடி அல்லது அதற்கு மேலும் இருக்க வேண்டும்.
2. திருத்தப்பட்ட மற்றும் திவால் தீர்மான நடைமுறை சட்ட கோட்பாடுகள் 2016 மற்றும் விதிகளின் படி குறிப்பிட்ட கால வரையறைக்குள் கொடுக்கப்பட்ட மற்றும் அனைத்து கட்டாயத் தேவைகளை உள்ளடக்கிய மற்றும் பூர்த்தி செய்யக்கூடிய தீர்மானத்திட்டமாக இருக்க வேண்டும்.
3. திவால் தீர்மான நடைமுறை சட்ட கோட்பாடுகள் மற்றும் விதிகளின் படி ஒப்புதல் அளிக்கப்பட்ட ரியல் எஸ்டேட் திட்டங்களை தனித்தோ அல்லது கூட்டு முயற்சியாகவோ அல்லது ஒப்பந்தக்காரர்களாகவோ, முடிக்கும் திறன் வேண்டும்
4. ரூ. 100 கோடி அல்லது அதற்கு மேலும் முதலீடு செய்து கட்டிடங்களை முடிக்கும் திறன் வேண்டும்.
5. மதிப்புமிக்க மற்றும் ஆரோக்கியமான நல்ல நிதி வசதி பெற்று இருக்கவேண்டும்.
6. உத்தேசித்த குறித்த காலத்திற்குள் கட்டி முடித்து வீடு வாங்குபவர்களின் வசம் அளித்து அவர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்.
7. ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டுடன் மற்றும் அதன் புரோமோட்டர்களுடன் உள்ள தொடர்பை தெரியப்படுத்த வேண்டும்.

மேற்படி ஆர்வமுள்ள நிறுவனங்கள் கடந்த 3 ஆண்டு தங்களின் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட உண்மை பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும். உரிமை விவரங்கள், முகவரி ஆதாரம் மற்றும் நிதி விவரங்கள், நிதி ஆதாரம் மற்றும் நிதி உட்செலுத்தலின் உறுதியான ஆதாரத்தை நிரூபிக்கும் பிற தொடர்புடைய ஆதார ஆவணங்களையும் சமர்பிக்க வேண்டும். தேவை இருப்பின் கூடுதல் ஆவணங்களை அளிக்க பட வேண்டி இருக்கும்.

உறையின் மீது "ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட் விருப்ப அறிவிக்கை" என்று எழுதி S.தனபால்–ரெசொலூஷன் புரொபஷனல், அறை எண் 103, முதல் தளம், காவேரி காம்ப்ளக்ஸ், 96/104, நுங்கம்பாக்கம் ஹை ரோடு, (நபார்டு மற்றும் ஐசிஐசிஐ அடுத்து) நுங்கம்பாக்கம், சென்னை - 600034. தொடர்புக்கு: 044 – 4553 0256 / 0257 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இன்சால்வன்சி மற்றும் பேங்க்ரப்சி கோடு, 2016, பிரிவு 29(2)–ன் படி கடன் கொடுத்தவர்கள் குழுவிற்கு தனிப்பட்ட முடிவின் படி ஆர்வமுள்ள ரெசொலூஷன் அப்ளிகென்ட்டிடம் உறுதி பெற்றபின் கம்பெனி தகவல் அறிவிக்கை அளிக்கப்படும். விருப்பபடிவங்களை கடன் கொடுத்தவர்கள் குழுவிற்கு (CoC) எந்த காரணமும் குறிப்பிடாமல் நிராகரிக்கும் உரிமை உண்டு.

இவ்வறிவிப்பு குறித்து ஏதேனும் விவரங்கள் தேவைபட்டால், csdhanapal.ibc@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் 18.01.2018 க்கு முன்பு அனுப்புமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். விருப்பமுள்ள நபர்கள் (ரெசொலூஷன் அப்ளிகென்ட்) தங்களது விருப்ப அறிவிக்கையை 18.01.2018 அன்று மாலை 1700 மணிக்கு அல்லது அதற்கு முன்போ சீலிடப்பட்டஉறைக்குள் வைத்து மேலே குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு துரித அஞ்சல்/பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ அளிக்கலாம்.

**Sd/-**
**S.தனபால்,**
**ரெசொலூஷன் புரொபஷனல்.**